REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 20உ செவ்வாய் (4—1—55) ★ ★ வெளியூர்: மார்கழி 21உ புதன் (5—1—55) [இதழ் 175

பென்சிலின் 'சர்வரோக சஞ்சீவி அல்லவாம்!

லண்டன், ஜன. 2—

பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்த சர் அலெக்சாண்டர் பிளெமிங் பென்சிலின் மருந்து எல்லா வியாதிகளையும் குணப்படுத்தவல்லதல்ல என்று 'பிராக்டிஷனர்' எனும் இதழ் ஒன்றில் எழுதியிருக்கிறார்.

என்றாலும் பென்சிலின் பல நோய்கட்கு அருமருந்தாயிருக்கிறதென்றும் எல்லோருமே பென்சிலின் உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டதால் பென்சிலின் மருந்தின் விலை அதைக் கட்டி அனுப்பும் விலையினைக்காட்டிலும் குறைவாகி இருப்பதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'ஜாதி வேற்றுமை ஒழிக்கப்பட வேண்டும்'

'சமத்துவம் இந்து சிந்தனைக்கு மாறுபட்டது'

'அரசியல் உரிமை கிடைத்தும் சமுதாய சமத்துவம் ஏற்படவில்லை'

பம்பாய் நீதிபதி கஜேந்திர காட்கர் அறைகூவல்

ஜல்கோன், டிச. 31—

"சமுதாய இயல், பொருளியல் துறைகளில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் அனைத்தையும் பகுத்தறிவின் துணைகொண்டு மதிப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்ற உண்மையை, இந்து மதத்தைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் உணர்த்த வேண்டியது இன்றியமையாததாகும். சமுதாய உண்மைகளையும், புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான அடிப்படையை அமைப்பதற்குத் தேவைப்படும் மூலக் கோட்பாடுகளையும் கண்டறியும் முயற்சிகளை இடைவிடாது ஊக்குவித்தல் வேண்டும். அம்முயற்சியில் ஈடுபடும் சமுதாய சீர்திருத்தக்காரருக்கு, பகுத்தறிவு வணக்கத்தையே ஒரு குறிக்கோளாகக் கொள்ளுமாறு வலியுறுத்த வேண்டும்."

"சமுதாய சமத்துவத் தத்துவத்தை வீட்டுக் கூரைகள் மீதிருந்து எடுத்துரைக்க வேண்டியது சமுதாய ஊழியர்களின் நீங்காக் கடமையாகும்."

"சமுதாய உயர்வு தாழ்வால் அவதியுறுவோர் ஆத்திரங் கொள்ளத்தான் கொள்ளுவர். மேற்கொள்ளப்பெறும் ஜனநாயக முறைகளாலும், கல்வி பரவலாலும் உயர்வு தாழ்வு ஒழியாவிட்டால், சமுதாயத்தில் துன்புறுவோர், பொறுமை இழந்து, சமுதாய உயர்வு தாழ்வை ஒழிக்க, வன்மை மிக்க முயற்சிகளை மேற்கொள்ள எண்ணத்தான் எண்ணுவர்."

"சமுதாய—பொருளாதார—அரசியல் நீதிகளை நிலைபெறச் செய்வது எனும் இந்திய அரசியல் சட்ட நோக்கம், வெறும் சட்டமியற்றுவதால் மட்டும் நிறைவேறிவிடக்கூடியதல்ல."

"சமுதாய சமத்துவமும் பொருளாதார உரிமையும் இல்லாத அரசியல் விடுதலையும் சமத்துவமும் வெறும் கேலிக்கூத்தாகும்."

இவ்வாறு பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதி பி. பி. கஜேந்திர காட்கர், மகாராஷ்டிர சமூக சீர்திருத்த இரண்டாவது மாநாட்டில் தலைமை வகித்துப் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

"ஜாதி ஏற்பாடும், தீண்டாமையும் தொலைக்கப்பட்டாக வேண்டும்," என அவர் வலியுறுத்தினார்.

"சட்டம் சிறந்த ஆயுதம்தான்; இருந்தாலும் சமுதாய நீதியை நிலை நாட்டுவதில் அவ்வாயுதம் ஆற்றல் மிக்கதாக இருக்க வேண்டுமானால், மக்களிடமிருந்து ஒருமிக்க ஒரே காலத்தில் ஏற்படும் ஆதரவை, அது பெற்றாகவேண்டும்.

"சமுதாய உணர்வின் ஒப்புதலைப் பெறுவதின் மூலமாக மட்டுமே தான், சமுதாய சமத்துவத்தை நிலை நாட்டும் நோக்குடன் உருவாக்கப்படும் சட்டங்களுக்கு வெற்றி கிட்டும். இச்குறிப்பிட்ட வகையில், சமூக சீர்திருத்த மாநாடு முக்கியமான பணியினை இன்று ஆற்றவேண்டியதாக இருக்கிறது.

"சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதையே முக்கியமாகக் கொண்ட அரசியல் உரிமை கிடைத்த பின்னரும் கூட, 'சமுதாய சீர்திருந்த இலட்சிய எல்லை வெகு தொலைவில் இருப்பதும், சமுதாய பொருளாதார நீதிகளைப் பெறுவது கடக்கமுடியாதத் தடைகளைக் கொண்டதாக இன்றும் இருந்துவருவதும்' வருந்தத் தக்கதாகும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

"சமுதாய சமத்துவமென்பது இந்து சிந்தனைக்கு மாறுபட்ட பண்பாகும். எனவே, இந்து வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் சட்டத்தின் மூலம் சமத்துவத்தை உண்டாக்குவதென்பது இயலாததாகும்."

"பொதுவாகப் பெண்களை, பழைமைப் பிடியில் இருப்பவர்கள் எனக் கூறப்படுகிறது. சமுதாய ஏற்பாட்டைத் திருத்தி அமைக்க வேண்டியதின் அவசியத்தை பெண்களுக்கு உணர்த்தினால், அவர்கள் ஆண்களைக் காட்டிலும் அதிதீவிரமான புரட்சிக்காரர்களாக மாறிவிடுவர்."

நீதிபதி கஜேந்திர காட்கர் மேலும் குறிப்பிட்டார்:—

"சமுதாய சீர்திருத்தவாதி தனது எதிரிகளிடம் பொறுமையற்றவராகவோ, கோபங்கொள்பவராகவோ, எதிரியை இகழ்பவராகவோ இருத்தலாகாது.

"சமுதாயப் புனர் நிர்மாணத்திற்கும் எழும் எதிர்ப்பிற்கு முழுப் பொறுப்பாயிருக்கிற அறியாமையின் மீதே சீர்திருத்தவாதியின் தாக்குதல் இருக்க வேண்டும்."

மேலும் பேசுகையில் அவர், "12-வது 13-வது நூற்றாண்டுகளில் சமுதாய சமத்துவத்திற்காக வார்காரிகளால் துவக்கப்பட்ட இயக்கத்தினைக் குறிப்பிட்டு, 'அந்த இயக்கத்தின் தலைவர்கள், சமூகம் நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதில் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தாலும் அறிவு பெறுவதில் பார்ப்பனர்கள் அனுபவித்து வந்த ஏகபோக உரிமையைத் தகர்த்தெறிந்து, இந்து தத்துவங்களை மராத்திய மொழியில் எளிய பாடங்களாய் வெளியிட்டனர்," என்றும் குறிப்பிட்டுக் காட்டினார்.

"எனவே, சமுதாய சமத்துவம் தேவை என்ற குரல் மராத்தியம் முழுவதும் ஒலிக்கச் செய்யவேண்டிய வகையில் மாநாடு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நாட்டில் உள்ள ஏராளமான மக்கள் இந்த சமுதாய சமத்துவம் என்ற தத்துவத்தின் பலனை அனுபவ வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ள பசியுடன் காத்திருக்கின்றனர். அந்தப் பசியினை தாமதமின்றி இந்து சமூகம் தணிக்க வேண்டும்."

மு. கருணாநிதி

சென்னை, ஜன. 2—

தோழர் மு. கருணாநிதி அவர்கள் திருச்சி-பரமகுடியில் முன்பு நடைபெற்ற மோட்டார் விபத்தில்—முகத்தில் அடிபட்டதின் எதிரொலியாகக் கண்ணில் ஏற்பட்ட கோளாறின் காரணமாக கடந்த இரு நாட்களாகக் கடுமையான உபாதைக்கு ஆளாகி, டாக்டரின் சிகிச்சையிலிருந்து வருகிறார். கண்களைத் திறக்கவும் முடியவில்லை. கண்ணிலிருந்து, சீழும் எடுக்கப்பட்டது. படுகையிலிருந்தபடி, சிகிச்சை பெற்று வருகிறார். இன்னும் சில மாதங்கள் ஓய்வுபெற வேண்டுமென்று டாக்டர் கூறியுள்ளார்.

காங்கிரஸ் மாநாட்டில் தென்னாட்டுப் பிரச்னை வற்புறுத்தப்படும்

தொழில் துறையில் காங்கிரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை!

இந்திப் பிரச்னை காங்கிரசுக்குத் தரும் தொல்லை

மக்கள் சபை காங். உறுப்பினர்கள் போக்கு?

புதுடில்லி, ஜன. 4—

ஆவடியில் இம்மாதம் நடைபெற இருக்கும் காங்கிரஸ் மாநாட்டில் தென்னாட்டுப் பிரச்னைகள் பல வற்புறுத்தப்படும் என்று தெரிகிறது. இப்பிரச்சினைகளில் முக்கியமானது இந்தி மொழி பற்றியது என்று சொல்லப்படுகிறது.

தென்னாட்டில் காணப்படும் இந்தி எதிர்ப்பைச் சமாளித்தும் காங்கிரசுக்கு மக்களிடம் ஆதரவைத் திரட்டுவது மிகவும் கடினமாக இருக்கிறதென தென்னாட்டு காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினர்கள் கருதுகின்றனராம். இந்தி மொழி பற்றிய பிரச்சினையில், காங்கிரஸ் அவசரப்படக் கூடாது என்றும் அவர்கள் கருதுகின்றனராம்.

இப்பிரச்சினை பற்றி வற்புறுத்த இருக்கும் மக்கள் சபை உறுப்பினர்கள், தாங்களும் விசுவாசமுள்ள காங்கிரசார் என்று கூறிக்கொள்வதுடன், காங்கிரஸ் தலைமைப்பீடம், இந்திப் பிரச்சினையினால் மிகவும் தொல்லைப்படும் ஏராளமான தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்றும் ஜாடையாகத் தெரிவிக்கிறார்களாம்.

காங்கிரசின் நன்மையைக் கருதியே அவர்கள் இப்பிரச்சினையை அணுகுகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

காங்கிரஸ் மாநாட்டில், இந்தி மொழி பற்றி காங்கிரஸ் கொண்டிருக்கும் அவசரப் போக்கினால், தென்னாட்டில் காங்கிரசின் செல்வாக்கு குறையுமென்பதை எடுத்துச் சொல்வதுடன் மட்டும் அவர்கள் நின்றுவிடுவார்களாம். இப்பிரச்சினையில் 'புரட்சி' ஏதும் செய்யமாட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

அடுத்து, தென்னாடு, தொழில் துறையில் முன்னேறவில்லை என்பதையும், காங்கிரஸ் ஆட்சியின்கீழ் மாற்றாந்தாய் அளிக்கும் சலுகைதான் தென்னாட்டிற்கு கிடைத்திருக்கிறது என்பதையும் சிலர் எடுத்துக் காட்டப் போகிறார்கள் என்று தெரிகிறது.

தொழில் துறையில் காங்கிரஸ் சர்க்கார் இந்தியாவின் எப்பகுதியின்மீதும் பேதம் காட்டுவது கிடையாது என்று காங்கிரஸ் தோழர்களில் சிலர் சுட்டிக் காட்டுகிறார்களாம்.

மூலப் பொருள்கள் கிடைப்பதைப் பொறுத்தே தொழில்கள் அமைக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

ஆனால், தென்னாட்டு காங்கிரஸ் தோழர்கள், காங்கிரஸ் மாநாட்டில், தொழிற்கொள்கை பற்றிய தீர்மான விவாதத்தின் போது, 'தென்னாடு தொழில் துறையில் அலட்சியப்படுத்தப் பட்டு விட்டது,' என்பதை சுட்டிக் காட்டப் போகிறார்களாம்!

சி. பி. சிற்றரசு

தோழர் சிற்றரசு உடல் நலம் பெற்று, பெங்களூரிலிருந்து திருச்சிக்கு வந்துவிட்டார். இனி, அஞ்சல் எழுதும் தோழர்கள் திருச்சி முகவரிக்கு எழுதவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விபசாரம் சட்டமாக்கப்படுகிறது

அர்ஜெண்டைனாவின் தீவிரம்

பியூனஸ் அயர்ஸ், ஜன. 4—

இருபது ஆண்டு தடைக்குப் பின்னர், அர்ஜெண்டைனாவில், விபசாரம் சட்டபூர்வமானதாக்கப் பட்டிருக்கிறது.

விபசார விடுதிகள் நடத்தத் தேவையான அனுமதிகளை வழங்குமாறு மாகாண சர்க்காருக்கு அர்ஜெண்டைனா சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

விபசார விடுதிகள் நடத்த அனுமதி மறுக்கும் அதிகாரம் உள்நாட்டு இலாகாவிடம் இருக்கும்.

சென்ற சில நாட்களாக ஜனாதிபதி பெரானின் ஒழுக்கச் சீர்திருத்த பிரச்சாரத்தின் இறுதிக் கட்டமே இந்தப் புதிய சட்டம் என்று சொல்லப்படுகிறது.

சென்னை, ஜன. 3—

நெய்வேலித் திட்ட வேலைகள் இன்று முதல் துவங்குவதாகத் தெரிய வருகிறது.

மதுரை மாநாடுகள்-ஜன. 8, 9-ல்!

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 4—1—1955 செவ்வாய்

பாலைவனத்துச் செடியல்ல!

சென்னையிலிருந்து ஆசிரியர்கள் கொண்ட குழு ஒன்று வடநாடு சென்றிருக்கிறது; வடக்கே அவர்கள் சென்றிருப்பது உல்லாசப் பிரயாணம் செய்வதற்காக என்றே கூறப்பட்டுள்ளது; டில்லிக்கும் அவர்கள் சென்றுர்கள்; 46 பேர்கள் கொண்ட இக்குழுவினருக்கு இந்தியாவின் ஜனாதிபதியும் பேட்டியளித்தார் என்று செய்திகள் வந்தன.

ஆசிரியர்கள் உல்லாசப் பிரயாணம் செய்வதென்பது ஒன்றும் புதிதல்ல; நாடு முழுமையும் சுற்றிப் பார்ப்பதால் கிடைக்கும் அனுபவம் ஆசிரியத் தொழிலுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடுமாதலால், இம்மாதிரியான உல்லாசப் பிரயாணங்கள் பல ஏற்கனவே நடைபெற்றுள்ளன.

மாணவர்கள்—ஆசிரியர்கள் அனைவரும் உல்லாசப் பிரயாணம் செய்வதால், மாணவர்கள், தாங்கள், வரலாற்றுப் புத்தகத்தில் படித்த சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரங்களை நேரில் பார்க்கவும்; ஆசிரியர்கள், மாணவர்களுக்கு தாங்கள் சொல்லித்தரும் பாடங்களுக்கு புதிய விவரங்களைச் சேகரிப்பதற்கும் வாய்ப்புகள் கிடைக்கும் என்பது நிச்சயம்.

வட நாட்டின் பல பகுதிகளையும் காண்பதற்கு சென்னையிலிருந்து இப்போது சென்றிருக்கிற ஆசிரியர்கள் குழுவில் பலர் சென்னை இந்து தியலாஜிகல் பள்ளியைச் சேர்ந்தவர்களாம். அவர்கள் சுற்றுப் பயணம் செய்வது பற்றி எழுதும் அளவுக்கு என்ன நேர்ந்துவிட்டது என்ற கேள்வி எழலாம். சாதாரணமாக, அவசியம் இல்லை என்றுலும், நாடு சுற்றிப் பார்க்கச் சென்ற இந்த ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சிலர், வரலாற்றுச் சரித்திரச் சான்றுகளை அறிவதுடன் நில்லாமல், இந்தியாவின் மொழிப் பிரச்சினை பற்றி அங்கே பேசியிருக்கிறுர்கள்: நாட்டின் வருங்காலக் குடிமக்களான மாணவர்களை நல்வழியில் அழைத்துச் செல்லப் பொறுப்பேற்றிருக்கும் அவர்களுக்கு, மொழிப் பிரச்சினையில் ஆர்வம் இருக்கக் கூடாது என்று சொல்லும் அளவுக்கு கொடிய உள்ளம் கொண்டவர்கள் அல்ல, நாம்; ஆனல், மொழிப் பிரச்சினை பற்றிப் பேசும்போது, அவர்கள் கூறியுள்ள கருத்து அவர்களுக்கு அவசியமில்லாதது — பொருத்தமற்றது — என்று எடுத்துக்காட்டவே விரும்புகிறோம்.

அலகாபாத் நகரில் இந்த ஆசிரியர் குழுவிற்கு வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டதாம். அந்த வரவேற்புக்குப் பதில் அளிக்கையில், ஆசிரியர் குழுவின் தலைவர், "இப்போது சென்னையில் இந்தியை எதிர்த்துவரும் கழக இயக்கம் இயற்கையாகவே மடிந்து போகும்; அதைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகப் பேசுகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது; வடக்கு-தெற்கு என்ற பேதத்தை மறந்துவிடுவதற்குக் காலம் வந்துவிட்டது" என்று கூறியுள்ளார்.

வடக்கே வாழும் 'இந்தி பக்தர்'களின் மனம் மகிழட்டும் என்று அவர் பேசியிருக்கக்கூடுமென பலர் கருதலாம். எப்படியாயினும், அவர் கருத்து, ஆழ்ந்த சிந்தனையின் பிரதிபலிப்பு அல்ல என்பதையும், வேண்டுமென்றே விபரீத புத்தியுடன்கூறப்பட்ட கருத்து என்பதையும் அலகாபாத் வாசிகள் உணர்ந்திருப்பார்கள்.

'இயற்கையாக மடிந்து போகும்,' என்று எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு அந்த ஆசிரியர் பேசினர் என்பது நமக்கு விளங்கவில்லை.

தென்னட்டில் இந்திக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு, 'எத்தகையது' என்பதை அந்தப் 'போதனுவாதி' உணரவில்லை என்றே கூறலாம்.

தென்னட்டில் இந்தி எதிர்ப்பு இயக்கம் தானக மடிந்து போக, அது பாலைவனத்துச் செடியல்ல; நாள்தோறும், ஓர் இயக்கமாகவே அது வளர்ந்து வருகிறது; அதை அறியும் உணர்வு அவருக்கு இல்லாமலிருந்திருக்கலாம்; அதனல்தான் அவசரப்பட்டுப் பேசியிருக்கிறுர். இப்பிரச்சினையைப் பற்றி நிதானமாக சிந்தித்தறியவில்லை என்பதைத்தான் அவர் பேச்சு காட்டுகிறது.

'தென்னடு—வடநாடு என்ற பேதங்களை மறந்துவிடும் காலம் வந்துவிட்டது,' என்று பேசியிருப்பதே அவருடைய அவசரப் போக்கிற்கு ஒரு உதாரணமாகும்.

46 பேர் வடக்கே சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறுர்கள். சாம்ராஜ்யங்களின் 'கல்லறைச் சுவடுகள்' நிறைந்து காணப்படும் டில்லி மாநகரம், 'தென்னடு என்றுல் எது? வடநாடு என்றுல் எது?' என்பதை அவர்களுக்கு நன்கு எடுத்துச் சொல்லியிருக்கும்.

உயர்ந்து நிற்கும் குதுப்மினர் கோபுரமும், தென்னட்டின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று எண்ணி ஏங்கி மடிந்த மன்னர்களின் கல்லறைகளும், அவர்களுக்கு, 'குமரி முதல் இமயம் வரை ஒரே நாடுதான?' என்பதை விளக்கியிருக்க வேண்டும்; ஆனல், ஆசிரியர்கள் குழு தலைவரின் பேச்சு, வரலாற்றுச் சரித உண்மையை, அவர் விளக்கமுற உணர்ந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கவில்லை.

இவை ஒருபுறமிருக்கட்டும்; உல்லாசப் பிரயாணம் சென்ற ஆசிரியர்கள் தேவையில்லாத பிரச்சினை பற்றி ஏன் பேச வேண்டும்? 'தானக மடிந்துவிடும்' என்று சுலபமாகக் கூறக்கூடிய நிலையிலா, தென்னட்டில் இந்தி மொழிப் பிரச்சினை இப்போது இருக்கிறது?

பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் தென்னட்டு உறுப்பினர்களின் மனக்கொதிப்பும், வட நாட்டு அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் இந்தியில் பேசும்போது, அவர்கள் என்ன பேசுகிறுர்கள் என்பதே புரியாத நிலையில், தென்னவர் வீசும் 'கேள்விக் கணை'களும் இந்தி எதிர்ப்புப் பிரச்சினை எவ்வளவுதூரம் நாட்டில் வளர்ந்துள்ளது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

தேச பக்தர்கள், காந்தியின் சிஷ்யர்கள் எனக் கூறப்படுவோர் கூடியிருந்த வழக்கறிஞர்கள் மாநாட்டில், 'இந்தி மொழி நீதி மன்றம் ஏறும் அளவுக்கு சிறிதளவேனும் தகுதி பெற்றது அல்ல,' என்று மறைமுகமாகப் பேசப்பட்ட நிகழ்ச்சியே இந்தி எதிர்ப்புப் பிரச்சினைக்கு நாட்டிலே எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும்.

இந்து தியலாஜிகல் பள்ளி ஆசிரியர் குழாமோ, 'இந்தி எதிர்ப்பு இயக்கம் தானக மடியும்' என்று கூறி தன்னைத் தானே திருப்தி செய்துகொள்கிறது.

வடக்கே போனவர்கள் காண வேண்டிய இடங்கள், அறிந்துகொள்ள வேண்டிய செய்திகள் எத்தனையோ இருக்கிறது; பண்டரீபுரத்து கோவிலில் காணப்படும் சிற்பங்களும், தஞ்சை கோவிலில் காணப்படும் சிற்பங்களும் யாருடையவை? எந்த இன மக்களின் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பவை?—என்று அந்த ஆசிரியர்கள் ஒப்பிட்டுப் பார்த்திருக்க வேண்டும்.

காதல் மனையாளுக்கு மண்டபம் கட்டி மகிழ்ந்த மன்னன் ஷாஜகானின் கலை ஆர்வம் எப்படிப்பட்டது என்பதை, அவர்கள் தாஜ்மகாலைப் பார்த்துத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும் — தெரிந்துகொண்டிருந்தால், மாணவர்களுக்கு, ஷாஜகானின் கலை ஆர்வம் எத்தகையது என்பதை எடுத்துச் சொல்லலாம்.

டில்லியில் எத்தனையோ சாம்ராஜ்யங்கள் தோன்றி மறைந்தனவே, அது எவ்வாறு, எப்படி, ஏன்—என்று டில்லியில் அடிக்கு ஒன்றுகக் காணப்படும் மன்னர்களின் கல்லறைகளின் முன்னல் நின்று, அவர்கள் சிந்தித்திருக்கலாம்.

ஜும்மா மசூதியைக் கண்டேன்; அதன் கலையழகைக் கேளீர்!—என்று மாணவர்களிடம் எடுத்துரைக்க முயலலாம்.

ஆசிரியர்கள் சுற்றுப்பிரயாணம் செய்கிறுர்கள் என்றுல் இவைகளைத்தான் எவரும் எதிர்பார்க்கக்கூடும்; ஆனல், இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, 'இந்தி எதிர்ப்பை நடத்தும் கழகங்கள் தானக மடிந்து போகும்,' என்று பேசுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை.

தெற்கே உள்ள இந்தி எதிர்ப்பு எத்தகையது என்பதை இந்து தியலாஜிகல் பள்ளி ஆசிரியர் குழுவினரைவிட நன்றுக வடநாட்டார் அறிந்திருப்பார்கள். ஆகவே, மொழிப் பிரச்சினைக்காக நடத்தப்படும் இயக்கம் என்றைக்கு மடியும் என்று பேசியதைவிட, நாட்டிலே கல்வி சீர்திருத்தம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதுபற்றிபேசியிருக்கலாம். அதையெல்லாம் விட்டுவிட்டு, அலகாபாத் நகரில், ஏதோ இரண்டொரு வாக்கியங்களில், இந்திய உபகண்டத்தில் மிகவும் முக்கியமானது என்று கருதப்படும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தைப் பற்றி அவர்கள் பேசியிருப்பதைப் பார்க்கும்போது, 'பரிதாபத்துக்குரியவர்கள்' என்று சொல்லுவதைத் தவிர, வேறு என்ன கூற முடியும்?

சிந்தனையில்லாமல் அவர்கள் கூறிய கருத்தை, நாம் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. மதிப்புக் கொடுக்கும் அளவுக்கு புதிய தத்துவம் ஒன்றையும் அவர்கள் சொல்லிவிடவில்லை. ஆனல் நாட்டிலே நடைபெறும் நிகழ்ச்சிகளின் உண்மை நிலைமையை உள்ளவாறு உணராமல், சில அவசர புத்திக்காரர்கள் பேசுவதைப் போன்று ஆசிரியர் குழாம் ஒன்றின் தலைவர் பேசியதைக் கண்டுதான் அவர்களுடைய 'பொறுப்பற்ற பேச்சு' பற்றிக் குறிப்பிட வேண்டியதாயிற்று.

திராவிட இயக்கம் இயற்கையாகவே அழிந்துவிடுமாம்!

ஆசிரியர் தூதுக் குழுத் தலைவர் கூற்று

அலகாபாத், ஜன. 1—

"இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் திராவிடர் இயக்கம் இயற்கையாகவே செத்துமடியும்; அந்த இயக்கங்களைப்பற்றி எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகப் பேசுகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது: ஒரே நாட்டினுடைய(?) பாகங்களாயிருக்கிற வடக்கிற்கும்—தெற்கிற்கும் இடையில் இருக்கும் வேறுபாடுகளைக் களைந் தெறிய வேண்டிய காலம் வந்துவிட்டது,"

என்று, சென்னை தியலாஜிகல் பள்ளி ஆசிரியர்கள் தூதுக் குழுவின் தலைவரான திரு. பாலகிருஷ்ண ஜோஷி என்பார் தூதுக் குழுவிற்கு அலகாபாத் பத்திரிகையாளர் சங்கம் தந்த வரவேற்பிற்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறுர்.

இந்தி இன்னும் சில காலத்தில் நாட்டின் பொதுமொழியாகிவிடுமென்றும், வடநாட்டவர், தென்னிந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்வது அவசியம் என்றும், தென்னிந்திய மொழிகள் இலக்கிய வளமிக்கவை என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

மத எதிர்ப்புத் தத்துவங்கள்

இயற்கையாகவே அழிந்து விடுமாம்!

சொந்த மக்களுக்கு ராமசாமி அய்யரின் ஆறுதல் மொழி

சென்னை, ஜன. 2—

"நாட்டில் சில நாத்திகர்(?)களால் பிரச்சாரம் செய்யப்படுகிற மத எதிர்ப்புத் தத்துவங்கள், காலப்போக்கில் தாமாகவே இயற்கையாக அழிந்துவிடும்"

என்று மைலாப்பூர் வைதீக மகாஜன சபாவில் பேசிய டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர் குறிப்பிட்டிருக்கிறுர்.

இராவணன், கம்சன், துரியோதனன் ஆகியோரது முயற்சிகள் எப்படித் தோல்வியுற்றன—கடவுள் மீது மக்கள் கொண்டுள்ள பக்தி எப்படி நிலைநிறுத்தப்பட்டது (?) என்பதை புராணங்களிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கியிருக்கிறுர்.

ஆரம்பக் கல்வி முறை பரிசீலனை

பலரது கருத்தறிய 78 கேள்விகள்

சென்னை, ஜன. 2—

சென்னை மாநிலத்தில் ஆரம்பக் கல்வி முறையைப் பரிசீலித்து அதைச் சீர்திருத்துவதற்காக டாக்டர் அழகப்பா (செட்டியார்) தலைமையில் அமைக்கப்பட்ட பரிசீலனைக் குழு, மொத்தம் 78 கேள்விகள் அடங்கிய கேள்வித்தாளை உருவாக்கி, சட்டசபை உறுப்பினர்கள், மாவட்டக் கழகத் தலைவர்கள், நகரசபைத் தலைவர்கள், பஞ்சாயத்துக் குழுத் தலைவர்கள், ஆசிரியர் சங்கங்கள், பள்ளிக்கூட நிர்வாகிகள் சங்கங்கள், கல்வி நிறுவனங்கள், கல்வித்துறையிலீடுபட்டிருக்கும் பிரமுகர்கள், மற்றும் கல்வித்துறையில் அக்கரை காட்டிவரும் பலருக்கும் ஒவ்வொன்று அனுப்பியிருக்கின்றது. அந்தக் கேள்விகள் பற்றிய கருத்தை வருகின்ற பிப்ரவரி திங்கள் முதல் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டுமென்று ஒவ்வொருவரையும் அக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

ஆரம்பக் கல்வியின் குறிக்கோள், ஆரம்பக் கல்வி நிர்வாக முறை, ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் ஊதியம், அவர்களது வேலை முறை, பொது மக்களது ஒத்துழைப்பு, ஆரம்பக்கல்வி திட்டம் பற்றிய ஆராய்ச்சிகள் போன்ற பல தலைப்புகளில் இந்த 78 கேள்விகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

பின் தங்கிய நாடுகளுக்கு உதவி

ஸ்காட்லாந்து கல்லூரி முயற்சி

பின் தங்கிய நாடுகளுக்கு தொழில் துறையில் உதவவும், தொழில் வல்லுனர் பயிற்சி தரவும் கிளாஸ்கோவிலுள்ள ராயல் டெக்னிகல் காலேஜ், திட்டம் வகுத்துள்ளது. கொழும்புத் திட்ட நாடுகளுக்கு உதவுவதே முக்கிய நோக்கமாகும். அந்தந்த நாட்டின் தேவையை அறிந்து பொறியியல் பட்டதாரிகளுக்கு உயர்தரக் கல்வி-பயிற்சி வசதியளிக்கவே இந்த ஏற்பாடு.

முதல் ஐந்தாண்டுகளுக்கு நிர்வாகச் செலவுக்கு நிதி உதவ ராக்பெல்லர் நிறுவனம் சம்மதித்திருக்கிறது.

குடியிருப்பு வசதி, குடிதண்ணீர் வசதி, போக்குவரத்து, வடிகால், சுகாதாரம், மின்சாரம், சுரங்கம், விவசாயம், வனத்துறை, நீர்ப்பாசனம் ஆகிய துறைகளில் பொறியியல் மாணவர்களுக்கு முழு பயிற்சி அளிக்கப்படும். மண் அரிப்பு, வரட்சி பூமி சாகுபடி, நீர்இயல் போன்ற பல துறைகளிலும் பரவலான பயிற்சித் திட்டம் உண்டு

தைப்பொங்கல் திராவிடர் திருநாள்

செய்திச் சுருள்

தோழர் அன்பழகன் சொற்பொழிவுகள்

சிதம்பரம் டவுன் மண்டபமைதானத்தில், 11—12—54 மாலை வள்ளுவர் கழக ஆண்டு விழா தோழர் சிங்காரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் திருநாவுக்கரசு சிறிது நேரம் பேசிய பின், தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறளை நாட்டு மக்கள் பயிலவேண்டியதின் அவசியத்தையும், அதன் கருத்துக்களின் உயர்வையும் விளக்கிக் கூறி, குறளைத் தாழ்த்திவரும் சூதையும் கண்டித்துப் பேசினார்.

* * *

திருமணம்

12—12—54 காலை 9 மணிக்கு அண்ணமலை நகர் தோழர் சி. ஆர். பொன்னம்பலம்— அவர்களின் மைத்துனி தோழியர் தேவகிக்கும்—தோழர் ஏ. இராமகிருஷ்ணன் அவர்கட்கும், தோழர் க. அன்பழகன் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர் வீரமணி மற்றும் பலர் மணமக்கட்கு வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது— பெற்றுக்கொண்டோம்—நன்றி —பொறுப்பாளர்.

* * *

பி. பள்ளிப்பட்டி (பொம்மிடி வட்டம்) தி. மு. கழகம்

31—12—54 மாலை 7 மணிக்கு தோழர் க. வேடியப்பன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் எம். எஸ். இராமநாதன் சிறிது நேரம் பேசிய பின், தோழர் க. அன்பழகன் தி. மு. கழகத்தின் சமூகச் சீர்திருத்த நோக்கம், கடவுள் கொள்கை, அரசியல் இலட்சியம் ஆகியவற்றை விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். பல கிளைக்கழகங்களின் சார்பில், தோழர் அன்பழகன் அவர்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்வி நிலை!

மதுரை, ஜன. 1—

"இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரை, ஆண்களில் 58,000 - பேரும், பெண்களில் 80,000 - பேரும் பள்ளி செல்லும் பருவத்தினர் எவ்விதக் கல்வியும் பெறுதவர்களாயுள்ளனர்; இவர்கள் ஆரம்பக் கல்வியேனும் பெறுவதற்கு மாவட்டக் கழகம் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்,"

என்று, இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தின் 1953—54-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை குறித்து சர்க்கார் கருத்தறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

பாகிஸ்தான் நாணய மதிப்பு குறைக்கப்படும்

அடுத்த சில மாதங்களில் பாகிஸ்தான் தனது நாணயத்தின் மதிப்பை குறைக்கலாம் என்று காரச்சியின் முக்கிய இதழ் ஒன்று தனது கருததைத் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்க உதவித் திட்டத்தின் மூலம் பொருள்கள் இறக்குமதியாக இருப்பதே இந்த ஏற்பாட்டிற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

பாகிஸ்தான் நாணயத்திற்கு தற்போது இருக்கும் மதிப்பை உயர்த்தாவிடில் பாகிஸ்தானுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்ய அமெரிக்க உற்பத்தியாளர்கள் தயங்குகிறார்கள் என்று அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அறிவித்திருக்கிறதாம்.

பட்டிமார்ப்பு கைத்தறித் தொழிலாளர் சங்கம்

30—12—54 மாலை 6 மணிக்கு, திரு. வ. டி. திருநாவுக்கரசு தலைமையில் ஆனகாபுத்தூர் பட்டிமார்ப்பு கைத்தறித் தொழிலாளர் சங்கச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில், தோழர்கள் பி. செயராம்தாஸ், மாசில. பாலையா, சி. இராமலிங்கம் ஆகியோர் பட்டிமார்ப்பு நெசவுத் தொழிலாளரின் கூலி படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவதைக் கண்டித்தும், இந்த அவலநிலையைத் தடுக்க சர்க்கார் ஆவன செய்யவேண்டுமெனக் கோரியும் பேசினர். பின்னர், மேற்படி சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— தலைவர் : ஏ. பி. ஹரி பூஷணம் ; துணைத் தலைவர் : ஜி. இராமையா ; செயலாளர்: எம். பாலையா ; துணைச் செயலாளர்: சி. இராமலிங்கம் ; பொருளாளர்: பி. வரதய்யா. மற்றும் 9 பேர் நிர்வாக குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், மேற்படி ரக நூல் நெசவாளிகள் கொண்ட ஊர்களிலிருந்து பிரதிநிதிகள் ஒன்றுகூடி, சென்னை—ஆவடியில் நடைபெறவிருக்கும் அகில இந்திய கைத்தறி நெசவாளர் காங்கிரசிடம் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வது என்று முடிவு செய்யப்பட்டது.

சென்னை-சூளை மதிவளர்ச்சி மன்றம்

1—12—54ல், தோழர் ப. குப்புசாமி தலைமையில் நடைபெற்ற மன்றக் கமிட்டி கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— தலைவர் : கு. புண்ணியகோட்டி ; செயலாளர் : அ. கண்ணபிரான் ; துணைச்செயலாளர் : மு. அன்புமணி ; பொருளாளர் : ப. குப்புசாமி ; செயற்குழு உறுப்பினர்கள் : ஏழுமலை, தனபால், வில்லாளன், பாண்டியன், பாலசுப்பிரமணியம், தனவேலு, நடராசன், கர்ணன், மாசிலாமணி, ராசு, கதிர்வேலு, குப்புசாமி, வேலன்.

பின்னர், மன்றத் திறப்பு விழாவையும், பொதுக் கூட்டத்தையும் ஜனவரி திங்கள் 31-ந் தேதிக்குள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சி கருதி ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்.

தூத்துக்குடி மக்கள் மறுமலர்ச்சி மன்றம்

25—12—54 காலை 11-30 மணிக்கு நடைபெற்ற மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டத்தில், பொங்கல் நாளை சிறப்பாகக் கொண்டாடுவது என்றும், சென்னை சர்க்கார் நாடகத் தடை சட்டத்தைக் கண்டித்தும், தூத்துக்குடி ஆர்வி மில் தொழிலாளர்களுக்கு பொங்கல் திருநாளுக்கு ஒரு மாத சம்பளம் 'அட்வான்சா'கக் கொடுக்கும்படி மில் நிர்வாகிகளைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரிவுபசாரக் கூட்டம்

மதுரை தெற்கு வெளி வீதியிலுள்ள 'தமிழ் நாடு' அச்சகத்தின் தலைமை அச்சுக்கோப்பாளர் தோழர் எம். எஸ். சுந்தரம் விலகிக் கொள்வதை முன்னிட்டு, 26-12-54 மாலை 4 மணி அளவில் திரு. ஏ. சுந்தரராசய்யா தலைமையில் ஓர் பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது. அவரது பணியினைப் பாராட்டித் தோழர்கள் பலர் பேசிய பின், தேநீர் விருந்தொன்றும் நடைபெற்றது.

பம்பாய் தெ. இ. ஆதி திராவிட மகாஜன சங்கம்

கி. ஆ. பெ. விசுவநாதத்திற்கு வரவேற்பு

26—12—54ல், தாராவி கணேசர் ஆலய சதுக்கத்தில், திரு. ஒ. த. அய்யாசாமி தலைமையில் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதத்திற்கு மேற்படி சங்கச் சார்பில், ஓர் வரவேற்பு நடைபெற்றது. தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் மதம், சாதி, கட்சிகளின் பேரால் மக்களை ஒன்று திரட்டுவதைக்காட்டிலும், பேசும் மொழியினையும், பிறந்த நாட்டினையும் முன்னிருத்தி அழைத்தால்தான், ஒருமையோடு கூடிய ஒரு பெரு நிலைக்குத் தமிழர்களை திரட்ட முடியுமென்றும், பிறப்பால் மனிதன் அடையும் பெருமைகளைவிட சீரிய செயல்களால் எய்தும் சிறப்புத்தான் உயர்ந்ததென்றும் உரைத்தார். அவருக்குப் பல கழகங்கள், மன்றங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

புதுவை திராவிடர் முன்னணி

26—12—54ல் நடைபெற்ற புதுவை திராவிடர் முன்னணியின் செயற்குழு கூட்டத்தில், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு, அவைகள் சென்னை முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டன.

தஞ்சை மாவட்ட மீன் பிடிப்போர் கூட்டுறவுச் சங்க சம்மேளனம்

15—12—54 மாலை 3 மணிக்கு, தஞ்சை மீன் இலாகா உதவி டைரக்டர் காரியாலயத்தில், திரு. ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி சம்மேளனத்தின் கூட்டத்தில், திரு. ஏ. மாரியப்ப மணியக்காரர், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகள் மேலும் அளிக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும் இம்மாதிரி சம்மேளனங்கள் அமைக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

சிவகெங்கை மஜீத் நினைவு படிப்பகம்

21—12—54ல், தோழர் சா. சுப்பையா தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்றச் செயற்குழுக் கூட்டத்தில், மன்ற வரவு - செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டு, படிப்பக ஆண்டு விழாவை விரைவில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. பின்னர், நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், இந்நகர் பெரிய கடை வீதியில் —தார் போடும் வேலையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமெனவும், அதே வீதியில் ஒரு சிறு நீர் கழிக்கும் கக்கூஸ் கட்டவேண்டுமென்று பஞ்சாயத்துப் போர்டாரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முத்துப்பேட்டை வ. உ. சி. சொற்பயிற்சி மன்றம்

24—12—54ல் தோழர் மா. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற மன்றத் துவக்க விழாவில், தோழர்கள் ரஜீஸ்கான், மு. அ. யாகூப், இரா நடராசன், ந ஞானசுந்தரம் ஆகியோர் பேசியபின், தோழர் ந. தருமலிங்கம் 'குறள் நெறி' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்.

வாழை இலை வியாபாரிகள் சங்கம்

1—1—55ல், ஜனப் எம். ஏ. வகாப் தலைமையில் தஞ்சாவூரில் நடைபெற்ற சென்னை மாநில (பச்சை) வாழை இலை வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் சென்னை மாநில அரசியல் நடவடிக்கைகளை தமிழ் மொழியிலேயே மேற்கொள்ளவேண்டுமென்றும், அழுகி விடக்கூடிய வாழை இலைகளுக்கு இவ்வாண்டு முதல் விற்பனை வரியை நீக்கிவிடவேண்டுமென்று சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொண்டும் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பன்னீர் செல்வம் நினைவுப் படிப்பகம்

மதுரை பொன்னகரம், மீனாட்சி தோப்பு பன்னீர் செல்வம் நினைவுப் படிப்பகத்தின் செயற்குழு கூட்டம், 19—12—54ல், தோழர் மணி தலைமையில் நடைபெற்ற போது, சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் தாயார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலசின்னணம்பட்டி அண்ணு அறிவு மன்றம்

29—12—54ல் தோழர் எஸ் பி. பி. சாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், மதுரை மாநாட்டு ஊர்வலத்தில் கலந்து கொள்வதென்றும், விரைவில் இங்கு ஒரு பொதுக் கூட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மதுரை — சத்திரப்பட்டி அறிவுப் பூங்கா படிப்பகம்

29—12—54ல், தோழர் வீ. மாயாண்டி தலைமையில் நடைபெற்ற படிப்பக பொதுக்குழு கூட்டத்தில், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அறிவிப்பு

"30—12—54-ம் தேதியன்று என்னைப் பற்றி வந்த செய்தி கண்டு வருந்துகின்றேன். நான், என் சொந்த அலுவலாக வெளியூர் சென்றிருந்தபொழுது, யாரோ சிலர், நான் இறந்துவிட்டதாகக் கழக தோழர்களிடத்திலும், பொது மக்களிடத்திலும் வதந்தியை கிளப்பிவிட்டதின் விளைவாக, ஊரில் பெரிய பரபரப்பு ஏற்பட்டதாலும், மற்றவர்களின் வற்புறுத்தலினாலும் துணைச் செயலாளர் அந்த அறிக்கைவிட நேர்ந்தது. பல ஊர்களிலிருந்து நம் கழகத் தோழர்கள் கடிதங்கள் எழுதியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நான் நலமே வந்து சேர்ந்தேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று குன்றை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் வீ. சா. ஒளியழகன் அறிவிக்கிறார். தோழர் ஒளியழகன் அவர்கள் காணமற்போனது பற்றி முன்னால் அறிவிப்புக் கொடுத்த குன்றை தி. மு.க. துணைச் செயலாளர் தோழர் டி. பி. எஸ். மணி அவர்களும், தோழர் ஒளியழகன் குன்றை வந்து சேர்ந்தார் என்று தெரிவித்துக்கொள்கிறார்.

திரு-கொச்சி கம்யூனிஸ்டுகள்

பட்டம் தாணுவை ஆதரிக்க மாட்டார்கள்!

திருவனந்தபுரம், ஜன. 2—

பட்டம் தாணுவின் மந்திரிசபை பிழைக்கும் என்ற நம்பிக்கை நாள்தோறும் குறைந்துகொண்டே வருகிறதாம்.

சென்ற சில தினங்களாக இங்கு கூடியுள்ள கம்யூனிஸ்டு கட்சியினர், பட்டம் ஆட்சிக்குப் பின்னர் இடதுசாரிகள் ஆட்சியை அமைக்க முடிவு செய்திருக்கின்றனராம்.

பட்டம் தாணுவின் மந்திரி சபையை அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்று தெரிகிறது.

புரட்சி சோஷலிஸ்டுகள், கேரள சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் ஆகியோர் அமைக்கும் மந்திரி சபையை ஆதரிக்குமாறு பி.-சோ. கட்சி உறுப்பினர்களை கம்யூனிஸ்டுகள் கேட்டுக்கொண்டனர்.

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினர், பட்டம் ஆட்சியிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக காங்கிரஸ்காரர்களை ஆதரிக்கக்கூடாதென்றும், அப்படி ஆதரித்தால் அவர்கள் திரு—தமிழக மக்களைக் காட்டிக் கொடுத்தவர்களாவர் என்றும் கம்யூனிஸ்டுகள் குறிப்பிட்டனராம்.

* * *

பட்டம் தாணு பயமுறுத்துகிறார்

எர்ணகுளம், ஜன. 1—

"எனது மந்திரி சபை தோற்கடிக்கப்பட்டால், சட்ட சபையைக் கலைக்குமாறு நான் ராஜப் பிரமுகருக்குக் கூறுவேன்" என்று திரு-கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளை கூறியுள்ளார்.

"நான் மற்ற எவருடைய ஆதரவையும் நாடிச் செல்லப் போவது கிடையாது," என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதம்

ஆட்சியாளர் கவனிப்பரா?

ஆசிரியர் : 'நம் நாடு'

ஐயா,

மூன்று பேரும், அதற்குக் குறைவான தொகையினரும் வேலை செய்யும் கடைகளுக்கு, சென்னை சர்க்கார், கடைச் சிப்பந்திகள் சட்டத்திலிருந்து விலக்களித்துள்ளது. இவ்விதி விலக்கின் காரணமாக விடுமுறையின்றி, ஓய்வின்றி வேலை செய்துவரும் தொழிலாளர்களில் நானும் ஒருவன்.

மூன்று பேரும் அதற்குக் குறைவானவர்களும் வேலை பார்க்கும் முடி திருத்தும் நிலையங்கள்தான் அதிகமாயுள்ளது. மூன்று பேருக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை பார்க்கும் முடி திருத்தும் நிலையங்கள் நூற்றுக்கு ஒன்றாகத்தான் இருக்கும். இதனால் என் போன்ற ஆயிரக் கணக்கான முடி திருத்தும் தொழிலாளர்கள் அவதியுற வேண்டியவர்களாகிறோம். என் போன்ற தொழிலாளரின் இத் துயர் துடைக்க ஆட்சியாளர் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

க. து. சீனிவாசன்,
சென்னை-7.

அனுதாபம்

30—12—54 இரவு 9 மணிக்கு, தோழர் எம். குப்புசாமி தலைமையில் நடைபெற்ற சென்னை 3-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், கழகப் பாதுகாப்பாளர் சு. பாண்டியன் சகோதரர் ஆறுமுகம் இயற்கையெய்தியமை குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கைத்தறி உடுத்திகளிக்கும் நன்னாள்

பனமா ஜனதிபதி சுட்டுக் கொல்லப்பட்டார்!

முன்னாள் ஜனதிபதி கைது

பனமாநகரம், ஜன. 3—

பனமா குடியரசின் ஜனதிபதி ஜொஸ் அன்டோனியோ ரேமோன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குதிரைப் பந்தயம் ஒன்றில், தனது குதிரை வெற்றிபெற்றதைக் குறித்து, பந்தய மைதானத்தில் மகிழ்ந்திருக்கும்போது இயந்திரத் துப்பாக்கியினல் கொலைகாரர்கள் ஜனதிபதியை சுட்டனர்.

46 வயதான அன்டோனியோ ரெமோன் இரண்டு மணி நேரத்திற்குப் பின்னர் மருத்துவ மனையில் மாண்டுபோனர். அவரது வயிறு குண்டுகளினல் துளைக்கப்பட்டுவிட்டதாம்.

இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த விருந்தினர்களில் 6 பேரும் கொல்லப்பட்டனர்; கொல்லப்பட்டவர்களில் ஜனதிபதியின் மெய்க்காப்பாளரும் ஒருவர்.

இக்கொலை நிகழ்ச்சிக்குப் பின்னர் பனமாவின் முன்னள் ஜனதிபதியான அருன்போ அரியாஸ் என்பவரை போலீசார் கைது செய்தனர்.

அவர், முன்பு, பனமா நாட்டின் ஜனதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டவர். பனமா நகரத்திற்கு 800 மைல் தூரத்தில் உள்ள தனது காப்பி தோட்டத்தில், அவர், தனது சிவில் உரிமைகளை இழந்த பின்னர் வாழ்ந்து வந்திருக்கிறார். இவரைக் கைது செய்ததின் மூலம் சந்தேகிக்கப்படும் நபர்களைக் கைது செய்ய அனுகூலம் ஏற்படும் என்று கருதப்படுகிறதாம்.

தெல்மா கிங் என்ற பெண் ஒருவரையும் போலீசார் கைது செய்துள்ளனராம். ஜனதிபதியைச் சுடுமாறு, கொலைகாரர்களுக்கு இப்பெண்மணிதான் உத்தரவிட்டாராம்.

பனமா நகரம் முழுமையும் போலீசார் சந்தேகிக்கப்பட்டவர்களைத் தேடுகின்றனர். தற்போது கொல்லப்பட்டவர் அமெரிக்க உதவியினல் பனமா மக்களுக்கு போதிய நன்மைகளைச் செய்தார் என்று சொல்லப்படுகிறது.

இப்போது கைது செய்யப்பட்டுள்ள அரியாஸ் என்பவர், 1941ல் ஜனதிபதி பதவியிலிருந்து விலக்கப்பட்டு, எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர், காலஞ் சென்ற ரெமோனின் உதவியினல் பதவிக்கு வந்தாராம். ரெமோன் அப்போது போலீஸ் இலாகாவின் தலைவராக இருந்தாராம்.

பதவிக்கு வந்தவுடன், அரியாஸ், ரெமோன் இராஜிநாமா செய்ய வேண்டும் என்று கூறினர் அதன் பின்னர் ஏற்பட்ட கலவரத்தில், அரியாஸ், சட்ட சபையைக் கலைத்துவிட்டார்.

நாட்டிலே பெரும் கலவரம் ஏற்பட்டது; 17 பேர் கொல்லப்பட்டனர்; ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். இறுதியில் அரியாஸ் பதவியிலிருந்து நீக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். சிறையிலிருந்தவாறே, அவர், தனது பனமெனிஸ்டா கட்சியை நடத்தினர். பின்னர் பனமா சட்டசபை, அரியாசை விடுதலை செய்தது; ஆனல், 1952-ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற ரெமோன், தனது பதவியை விட வேண்டுமென்று கோரினர்.

மக்களிடையே சமூகமாக பழகும் வழக்கமுடைய ரெமோன் பனமாவின் ஜனதிபதியாக பின்னர் புகழ் பெற்றார்.

ஹைதிராபாதில் ஊரடங்குச் சட்டம்!

அகாலிதளம்—மகாபஞ்சாப் முன்னணி மோதுதல் எதிரொலி

ஹைதிராபாத் நகரில் 24 மணி நேரம் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஜனவரி 6-ந் தேதி வரை இந்த உத்தரவு அமுலிலிருக்குமென்று தெரிகிறது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் அகாலிதளத்தினருக்கும், மகா பஞ்சாப் முன்னணியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே கலவரம் நிகழ்ந்ததை ஒட்டி மாவட்ட நீதிபதி இந்த ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்.

முன்னாள் பிரெஞ்சிந்திய சுங்கவேலி ரத்து

புதுடில்லி, ஜன. 3—

முன்னாள் பிரெஞ்சிந்தியத் திட்டுகளைச் சுற்றியுள்ள சுங்கச் சாவடிகளும் சாமான் போக்கு வரத்துக்குள்ள பரிசோதனை ஏற்பாடுகளும் ஜனவரி 10-ந் தேதி முதல் ரத்தாகும் என்று இந்திய சர்க்கார் நிதி இலாகா அறிக்கை யொன்று கூறுகிறது.

அந்த முன்னாளைய பிரெஞ்சிந்தியப் பகுதிகளிலும், இந்தியாவிலும் உற்பத்தியாகும் பொருள்களின் ஏற்றுமதி—இறக்குமதி இதுவரையும் இருந்ததைப் போன்றே தாராள அடிப்படையில் நீடித்திருக்கும் என்று தெரியவருகிறது.

அதிகார மாற்ற தினமான 1954 நவ. 1-ந் தேதியன்றோ அல்லது அதற்குப் பிறகோ வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு சுங்க இறக்குமதிக் கட்டுப்பாடுகள் எதுவும் இருக்காதாம்.

ஆனல் 1954 நவ. 1-ந் தேதி இறக்குமதியான பொருள்களை வைத்திருப்பவர்கள் சுங்க வரி செலுத்தாமல் அவற்றை இந்தியாவிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். அப்பொருள் பிரச்சினைகளில், இறக்குமதிக் கட்டுப்பாடு அனுமதி பெறுவதும் அவசியமாயிருக்குமென்றும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

புது சுகாதார நிலையங்கள்

புதுடில்லி, ஜன. 2—

தேசிய விஸ்தரிப்புத் திட்டம் அமுல் நடக்கும் பகுதிகளில் சில வற்றில் 85 சுகாதார நிலையங்களை ஏற்படுத்த மத்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறதென்றும் இதற்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாயும் தெரிகிறது.

ஒவ்வொரு சுகாதார விடுதியிலும் ஒரு மருத்துவச்சாலை இருக்குமாம்.

சேமிப்பு நிதி: பணம் வாங்க புது வசதி

புதுடில்லி, ஜன. 3—

சென்னை, பம்பாய், கல்கத்தா தலைமை தபால் அலுவலகங்களிலும், புதுடில்லி தலைமை தபால் அலுவலகத்திலும் 'சேமிப்பு பாங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள், வாரத்திற்கு இருமுறை பணம் வாங்கலாம் என்றும், இப்புதிய உத்திரவு இன்று அமுலுக்கு வருமென்றும் அறிவிக்கப்படுகிறது.

முன்னறிவிப்பின்றி வாரத்திற்கு ரூ. 1000 வரை எடுக்கலாம்; அதற்கு அதிகமாக எடுப்பதற்கு எழுத்து மூலம் ஒரு வார முன்னறிவிப்பு தரவேண்டும் என்றும் கூறப்படுகிறது.

கிருஷ்ணகிரி அணைத் திட்டம்

காமராசர் துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, ஜன. 3—

சேலம் மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டத்தை சென்னை முதலமைச்சர் காமராசர் ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

இத்திட்டம் ரூ. 1·84 கோடி செலவில் 3 வருட காலத்தில் முடிவடையும் எனத் தெரிகிறது.

இதன்படி கிருஷ்ணகிரிக்கு 6½ மைல் தொலைவில் பெரிய முத்தூர் கிராம எல்லையில் 241 கோடி கன அடி தண்ணீர் தேங்கக்கூடிய நீர்த் தேக்கம் அமைக்கப்படுகிறது. இதற்கு அருகாமையில் உள்ள புகைவண்டி நிலையம் வடாற்காடு, திருப்பத்தூர் ஆகும்.

அணையின் நீளம் 3,623 அடி; அதில், 2,876 அடிக்கு மண் பகுதியும், 807 அடி கல் அணையும் கட்டப்படுமாம்.

இதன் மூலம், ஏற்கனவே பாசன வசதி பெற்றுள்ள 2,460 - ஏக்கருக்கு நீர்ப் பாசன வசதி கிடைக்கும் என்றும், இதன் மூலம் 3,500 டன் அதிக அரிசி உற்பத்தியாகும் என்றும் கூறப்படுகிறது.

நகரசபைக்கு சர்க்கார் தரும் மானியம்

சென்னை, ஜன. 3—

1954–55ம் வருடத்திலிருந்து அடுத்த உத்திரவு வரையில் ஆண்டு தோறும் ரூ.5 லட்சம் மானியமாக, சென்னை நகர சபைக்கு சர்க்கார் தர அனுமதித்திருக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது.

நகர சபையின் வருமானம் ஒரே அளவில்தான் இருப்பதாகவும், ஆனல், நிர்வாகச் செலவு உயர்ந்து விட்டதாயும், இதனல் சாலைகள் அமைப்பதுபோன்ற பொது வசதிகளை சரிவரக் கவனிக்க முடியவில்லை எனவும் சர்க்காருக்கு கமிஷனர் அனுப்பிய குறிப்பின்மீதே சர்க்கார் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்களாம்.

கி. பாகிஸ்தானுக்கு இந்தியத் துணிகள்

அமெரிக்கா வாங்கியது

ஆமதாபாத், ஜன. 3—

ஆமதாபாத், பம்பாய் ஆகிய நகரங்களிலிருந்து ரூ. 74 லட்சம் மதிப்புள்ள 7,000 பேல் துணியை அமெரிக்கா வாங்கியிருக்கிறது. இதற்கான பணம், டாலர் மூலமாகக் கொடுக்கப்பட்டதாம்.

அமெரிக்க ஏஜென்சி ஒன்றின் மூலமாக இத்துணிகள் விற்கப்பட்டன என்றும், இவை கிழக்கு வங்கத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிகிறது. வாங்கப்பட்ட துணிகளில் பெரும்பாலும் ஷர்ட்டிங் துணிகளும், புடவைகளும் உள்ளனவாம்.

முன்னாள் எம். எல். ஏ., காங்கிரசிலிருந்து ராஜிநாமா?

கர்னூல், ஜன. 4—

டி. மல்லையா என்ற ஆந்திர சட்டசபையின் முன்னாள் உறுப்பினர் காங்கிரசிலிருந்து விலகி விட்டதாகத் தெரிகிறது.

ஆந்திர பிரதேச காங்கிரசுக்கு அவர் எழுதியுள்ள ராஜிநாமா கடிதத்தில், தனக்கு எம்மிகனூர் தொகுதியில் பொது அல்லது ரிசர்வ் இடத்தில் எதிலும், காங்கிரஸ் 'டிக்கட்' தரப்படாததால், தான் காங்கிரசிலிருந்து விலகிக் கொள்வதாக எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

கழகக் கூட்டம்

★

ஆலங்கோட்டை

மாரியம்மன் கோவிலுக்கு எதிரில்

6—1—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

ப. நாராயணசாமி

இரே. கணேசன்

சொற் பயிற்சிக் கூட்டம்

5-1-55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லத்தில், தோழர் என். கோபால் தலைமையில் 'அன்பின் பங்கு' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

5-1-55 இரவு 9 மணிக்கு, அம்மாப்பேட்டை தி. மு. கழகத்தில் சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பொதுச்செயலாளர் அறிக்கைப்படி கைத்தறி வாரம் கொண்டாடுவதைப் பற்றி யோசிக்கப்படும்.

ஆண்டு விழா

9-1-55 மாலை 3 மணிக்கு, கொழும்பு, களனி பீயகம ரோடு, 410-ம் எண்ணுள்ள இல்லத்தில், சான் தாமஸ் அரங்கில், நெல்லை மாவட்ட கொம்பன் குளம் கிராம முன்னேற்றக் கழக இலங்கை கிளையின் இரண்டாவது ஆண்டு விழா தோழர் வி. எஸ். நாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் [illegible] மணி, ஏ. ஆர். கே. சாமி, க. கா. சுந்தரேசன், [illegible] பே. தேவதாசன் ஆகியோர் பேசுவர்.

மண விழா

9-1-55 ஞாயிறு மாலை 4 மணிக்கு, கொழும்பு வெல்லவத்தை ஸ்ரீ நாராயண குருமண்டபத்தில், தோழர் டி. எம். பீர்முகம்மது தலைமையில், தோழர் மா. செ. அருள்-தோழியர் வ. க. மணியம்மை மண விழா நடைபெறும். தோழர்கள் கு. மா. திராவிடக்கழல், இரா. அதி. மணி, எம். பி. பாரதி, டி. எம். டபுர்டு. சேனாதிபதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கைத்தறி விற்பனை

"தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சென்னை — ஏழுகிணறு தி. மு. கழகச் சார்பில், கைத்தறி வாரம் கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டு, 9–1–55 காலை 9 மணியளவில் கைத்தறி துணி விற்பனை ஊர்வலம் நடைபெறும்" என்று, சென்னை 9-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

அணு இரகசியம்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ரஷ்யா தெரிவிக்கும்

சோவியத் யூனியனின் 1956—60-ம் ஆண்டுகளின் ஐந்தாண்டுத் திட்டப்படி கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ரஷ்யா அணுவின் இரகசியத்தைத் தெரிவிக்க இருக்கிறதாம்.

இதன்மூலம் போலந்து, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லாவேகியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா ஆகிய நாடுகள் பயனடையுமென்று தெரிகிறது.

சென்ற டிச. 25-ந் தேதியன்று ஹங்கேரிக்கு அணு பற்றிய ஆராய்ச்சிக்கு கதிர் இயக்கப் பொருள்கள் அனுப்பப்பட்டனவாம்.

14 மின்சாரத் தொழிலாளர்கள் கைது

தடையை மீற எத்தனித்தனராம்

பெங்களூர், ஜன. 3—

மைசூர் மாநிலத்தில் சர்க்கார் மின்சார இலாகா ஊழியர்கள் சங்கத்தின் அமைப்புச் செயலாளர் ஷமீத் கூாவும் மற்றும் 13 பேர்களும் இன்று காலை கைது செய்யப்பட்டனர் எனத் தெரிகிறது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், நகரில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை மீறி கூட்டம் நடத்தியதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றனர்.

மின்சார வினியோக நிலைமை வழக்கம் போலவே இருந்து வருவதாக சர்க்கார் அறிக்கையொன்று கூறுகிறது.

சுதந்திரத்திற்குப் பிறகு

தூக்கு தண்டனை பெற்ற முதற் பெண்

புதுடில்லி, ஜன. 3—

மூன்று இளம் பெண்களை விஷமிட்டுக் கொலை செய்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் ரத்தன்பாய் ஜெயின் என்னும் ஒரு பெண்ணுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு, டெல்லி மாவட்ட சிறையில் இன்று காலை தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது.

1947-ஆகஸ்டு 15க்குப் பிறகு தூக்கு தண்டனை பெற்ற முதற் பெண்மணி இவர்தானும்.

கோதுமை ஏற்றுமதிக்கு எதிர்ப்பு

உண்ணாநோன்பு மேற்கொண்டனர்

நேவார், ஜன. 4—

பீடித் தொழிலாளர் சங்கத் தலைவரான ஆல்பர்ட் உசேன், மராமத்திலாகா ஊழியர் சங்கத் தலைவரான டேக் சந்த் மகேந்திரா என்றிருவரும், மாநிலத்திலிருந்து கோதுமை ஏற்றுமதி செய்யப்படுவதை எதிர்த்து உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார்களாம்.

கோதுமை ஏற்றுமதி அனுமதிக்கப்படுவதினல் கடந்த மாதத்தில் விலை ஏறியுள்ளதென்றும், எனவே, கோதுமையை மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்வதை அரசாங்கம் தடுக்கவேண்டும் என்றும் அரசாங்கம் தடையுத்தரவு பிறப்பிக்கும் வரையில் தாங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லையென்றும் அவர்களிருவரும் கூறியுள்ளனராம்.

வேடிக்கை இல்லை!

ஆமதாபாத்—

கதர் நூல் நூற்புப் போட்டி ஒன்று நடைபெற்று, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனல், வேடிக்கை என்னவென்றால், கதர் நூற்புப் போட்டியில் பரிசு பெற்றவர்களே கதராடை அணிந்திருக்கவில்லையாம்.

இது கண்ட பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய், கோபாவேசம் கொண்டு, "எந்த நோக்கத்திற்காக 'கதர் நூற்பு யக்ஞம்' நடத்தப்படுகிறதோ அதுவே தோல்வியடைந்துவிடுகிறது," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், "வழக்கமாக, வீட்டில் நூல் நூற்று, கதராடையே எப்போதும் அணிபவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்," என்றும் கூறியிருக்கிறார்.

உறவு ரத்தாகிறது!

பாக்தாத், ஜன. 3—

ரஷ்யாவுடன் ஸ்தானீக உறவை தற்காலிகமாக ரத்து செய்வதென ஈராக் சர்க்கார் இன்று தீர்மானித்திருக்கிறதாம்.

ரஷ்ய அதுவராலய அதிகாரியிடம் இம்முடிவு அறிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

சிக்கன நடவடிக்கையாக, மாஸ்கோவில் உள்ள ஈராக் ஸ்தானிகராலயம் இரு மாதங்கட்கு முன் மூடப்பட்டதைத் தொடர்ந்து ஸ்தானீக உறவையே துண்டிக்க இன்று முடிவாகியிருக்கிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.

தோழர்களே! மதுரை வாரீர்!!